ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/12 - 2024 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2024.04.30

*2382/12 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண சபை

*தென் மாகாண சபையின் 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டத்தின் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (திருத்திய) நியதிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள்*

*1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை பிரதான நியதிச்சட்டத்தின் 41 ஆம் பிரிவு மற்றும் 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (திருத்திய) நியதிச்சட்டத்தின் தத்துவங்களுக்கு அமைய தென் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் சட்டம் ஒழுங்கு, நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள், தற்போது அந்த மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள காரணத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (இ) உறுப்புரையினால் தென் மாகாண ஆளுநராகிய விலியம் விஜேசிங்க கமகே ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ளதனால் அந்த தத்துவங்களின் பிரகாரம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் இதன் மூலம் வெளியிடப்படுகின்றது. இந்தக் கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும்.*

**கலாநிதி விலியம் விஜேசிங்க கமகே,**
தென் மாகாண ஆளுநர்

*தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,*
*2024 ஏப்பிறல் 30.*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கட்டளைகள்

01. இந்தக் கட்டளை 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க "முச்சக்கர வண்டி பயணிகள் சேவைக் கட்டணங்களை அறவிடும் கட்டளைகள்" என அழைக்கப்படும்.

02. இந்தக் கட்டளை தென் மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க முச்சக்கர வண்டி பயணிகள் சேவை ஒழுங்கு விதிகள் 10 இன் கீழ் அதிகாரசபையினால் விதிக்கப்படும் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்ட அட்டவணை இல. 04 இல் 02 ஆவது மற்றும் 6 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மாத்திரம் மற்றும் அதற்கமைய செலுத்த வேண்டிய கட்டணங்கள் பற்றிய திருத்தமாகும்.

**அட்டவணை 04**

அதிகாரசபையினால் விதிக்கப்படும் கட்டணங்கள்

இந்த அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டுக்காக செலுத்த வேண்டிய கட்டணம் அந்த அட்டவணையின் II ஆம் நிரலில் அதையொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களாக அமைதல் வேண்டும்.

| நிரல் I<br>விடயம் | நிரல் II<br>செலுத்த வேண்டிய கட்டணம்<br>ரூ. சதம். |
|---|---|
| 01. முச்சக்கர வண்டியின் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்றைப் புதுப்பிக்கும் வருடாந்த கட்டணம் | 500.00 |
| 06. முச்சக்கர வண்டியின் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப் பத்திரமொன்றை விநியோகித்தல் | 500.00 |

இந்தக் கட்டளைகள் 2024 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

EOG 05 - 0001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.